# மாவனல்லை பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறிப்பிட்ட வருடத்திற்கு கிடைத்த 04 தொழிலகளின் முடிவுற்ற பெறுமதி தொடர்பாக ரூபா.1,155,596 வாகும் ஆயினும் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்படடோர் தொடர்பாக ரூபா. 1,167,071 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன் காரணமாக 2016 திசம்பர் 31 ஆம் திகதி தொழில் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்படடோர் பெறுமதி ரூபா.11,475 வினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட ஆயுர் வேத நன்கொடை ரூபா. 760,500 அபராதம் மற்றும் குற்றப்பண வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதால் நன்கொடை ரூபா. 760,500 குறைவாகவும் அபராதம் மற்றும் குற்றப்பணக் கட்டணம் அப் பெறுமதியினால் அதிகரித்தும் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா.893,873 வாகனத் தரிப்பிட வருமானம், வாடகை வருமானமாக கவனத்திற் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டதால் மீளாய்வாண்டில் சேவைக் கட்டண வருமானம் ரூபா.893,873 குறைவாகவும் மற்றும் வாடகை வருமானம் அப் பெறுமதியினால் அதிகரித்தும் காணப்பட்டது.

(ஈ) கடந்த வருடங்களில் மதிப்பீட்டு வரி 02 தொகுதிகளில் சபைக்குரிய 38 சொத்துக்கள் தொடர்பாக ரூபா. 35,356 பில் பண்ணப்பட்டும் மற்றும் தனியார் சொத்துக்களுக்காக ரூபா. 42,060 அதிகமாகவும் பில் பண்ணப்பட்டதால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதிக் கணக்கு மீதிகள் ரூபா. 77,416 வினால் அதிரித்தும் காணப்பட்டது.

1.3.2 <u>பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 65,717,951 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா.28,617,097 ஒரு வருடத்திற்கும் மேலான பழைய மீதியாகும்.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 96,939,906 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா.22,852,304 ஒரு வருடத்திற்கும் மேலான பழைய மீதியாகும்.

1.3.3 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1987 ஆம் வருட 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 (1) பிரிவு மற்றும் பிரதேச சபை நிதி விதிகள் 33 | பல வருடமாக முன் கொண்டு வரப்படும் ரூபா. 6,942,540 நிலுவை வரிப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 ஆம் வருட 38 இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1958 ஆண்டு 15 இலக்க ஊழியர் சேமலாப நிதயச் சட்டம் | குறிப்பிட்ட மாதம் தொடர்பாக செலுத்த வேண்டிய பங்களிப்புப் குறிப்பிட்ட மாதம் தொடர்பாக செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் அடுத்து வரும் மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் இலங்கைமத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்தும் 2003 ஏப்ரல் முதல் 2008 ஒக்டோபர் வரையிலான காலப்பகுதிக்கு பங்களிப்புப் பணம் செலுத்துவதற்கு தாமதம் ஆகியதன் காரணமாக மிகை கட்டணம் ரூபா. 80,666 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சோசலிக குடியரசின் நிதிக் கோவை<br>(i) நி.கோ 371 (2) ஆ | முற்பணம் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட விடயம் முடிவடைந்ததுடன் தீர்க்கப்பட வேண்டியிருந்தும் 2016 வருடத்திற்குரிய முற்பணம் ரூபா.623,224 ஆகும் |

(ii) நி.கோ 396 (2) ஈ

வழங்கப்பட்டு 06 மாதம் கடந்த கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 04 காசோலைகளின் பெறுமதி ரூபா. 17,200 தொடர்பாக நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

1.3.2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 33,446,236 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 30,295,596 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 3,150,640 அதிரிப்பைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 3,150,640 தொகை அதிகரிப்புக்கு 04 வருமான விடயங்களின் அதிகரிப்பும் 05 செலவின விடயங்களில் குறைவும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.12.31 இல் நிலுவை<br>2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 13,899 | 6,781 | 11,822 | 6,695 | 7,117 | 5,127 | 12,244 |
| ii | வாடகை | 1,741 | 58 | 18,256 | 18,159 | 1,683 | 97 | 1,780 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 126 | 14 | 1,450 | 1,450 | 112 | - | 112 |
| iv | ஏனைய வருமானம் | 55,638 | 30,593 | 112,763 | 1,225 | 25,045 | 77,581 | 102,626 |
| | மொத்தம் | 71,404 | 37,446 | 144,291 | 27,529 | 33,957 | 82,805 | 116,762 |

### 2.3.2 மதிப்பீட்டு வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீட்டு வரி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தும் 2008 ஆம் வரடத்தின் பின்னர் வரி மதிப்பீடு செய்யப்படாததன் காரணமாக அபிவிருத்தி விடயங்கள் அடிப்படையில் வருடாந்த பெறுமதி அதிகரிக்க வேண்டிய சொத்துக்கள் கண்டறிய முடியாததனால் வருடாந்தம் சபைக்கு கிடைக்க வேண்டிய விசாலமான வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) உரிமை மாற்றம் தொடர்பாக 2010 வருடம் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2010 வருடம் முதல் 2015 வருடம் வரை கிடைக்கப் பெற்ற உரிமை மாற்றம் தொடர்பான விண்ணப்படிவங்கள் 1,153 இல் 535 மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. உரிமை மாற்றம் உடனடியாகச் செய்து கொள்வதும் நிலுவை வரிப்பணம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) கமிஷன் கொடுப்பனவு அடிப்படையில் 03 ஊழியர்களை நியமித்து நிலுவை வரிப்பணம் அறவிடுப்பட்டிருந்ததும் 2016 ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு வரி அறவீடு நூற்றுக்கு 41 வீதம் ஆகும்.

2.3.3 <u>குத்தகை வாடகை</u>

2002 வருடம் முதல் 2013 வருடம் வரையிலான காலப்பகுதிக் குரிய 18 இறைச்சிக் கடைகள் மற்றும் 04 மீன் கடைகளிலிருந்து நிலுவை வாடகையாக மொத்தம் ரூபா. 1,081,079 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

2.3.4 <u>அனுமதிப் பத்திரக் கட்டணம்</u>

2016 வருடத்திற்காக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாத 35 வியாபாரம் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா. 27,200 அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்ததும் கொடுப்பனவு செய்யத் தவறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.5 <u>வேறு வருமானம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) 2011 திசம்பர் 09 ஆம் திகதி 1736 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி சபை அதிகார எல்லைக்குல் பொருத்தப்பட்டிருக்கும் நிலையான மற்றும் தற்காலிக அறிவித்தல் பதாகைகள் மீது அறவிட வேண்டியிருந்தும் நிலுவையாகவுள்ள 05 அறிவித்தல் பதாகைகளிலிருந்து அறவிட வேண்டிய கட்டணம் ரூபா. 169,600 வினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2016 வருடம் தொடர்பாக நிலையான அறிவித்தல் பதாகைகள் தொடர்பாக ஆய்வு மேற் கொண்டிருக்கவில்லாததுடன், 2016 ஜூன் 29 ஆம் திகதி பௌதீக பரிசோதனைப் படி 30 நிலையான விளம்பர அறிவித்தல் பதாகைகளுக்கு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளததால் ரூபா. 380,065 வருமானம் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை.

(இ) சிறுவர் பூங்காவிற்கு அருகில் உள்ள வாகன நிறுத்தும் இடம் தொடர்பாக 2014 வருடத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா.100,866 நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

2.3.6 <u>நீதிமன்ற அபராதம் மற்றும் முத்தரைக் கட்டணம்</u>

மாகாண சபையின் பிரதான செயளாலர் மற்றும் வேறு அதிகாரிகளிடமிருந்து 2016 திசம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற அபராதம் ரூபா. 2,097,125 மற்றும் முத்தரைக் கட்டணம் ரூபா. 38,144,432 ஆகும்.

3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினை விட 08 பதவி வகைகள் தொடர்பாக 21 ஊழியர்களை சேவையில் அமர்த்தியிருந்ததுடன் 06 பதவி வகையில் 09 ஊழியர்களின் பற்றாக்குறை காணப்பட்டது.

(ஆ) 2005 வருடம் மற்றும் 2014 வருடத்திற்கு இடையிலான காலப்பகுதியினுல் இடமாற்றம் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் காணாமல் போன 11 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா. 295,452 ஊழியர் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

3.2 <u>செயற்பாட்டு செயற்திறனின்மை</u>

சபைக்குரிய மாவனல்லை ஆயுர் வேத வைத்திய நிலையத்தில் 30 மருந்து வகைகள் மற்றும் அல்பிட்டிய வைத்திய நிலையத்தில் 23 மருந்து வகைகள் 2015 திசம்பர் 31 ஆம் திகதியாகும் போது முடிவுற்றிருந்ததுடன் 2016 ஜுலி வரை அந்த மருந்து வகைகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளாததால் மருந்தகத்தினை நடாத்துவதற்கோ வெளிவாரிச் சிகிச்சை சேவையினை நடாத்துவதற்கும் பிரச்சினை காணப்பட்டதுடன் நோயாளரின் வருகையும் குறைந்திருந்தது.

3.4 <u>தின்மக் கழிவு முகாமை</u>

கழிவு முகாமை மத்திய நிலைய பூமியில் கலி பவுசர் மூலம் கொண்டு வரப்படுகின்ற மலக் கழிவு அகற்றுவது தொடர்பாக நீண்ட காலமாக இருந்து பயன்படுத்தும் பாதுகாப்பற்ற குழி நிறைந்து போகும் அளவில் உள்ளதுடன் சிறியதொரு மழைக்கும் குழி நிறைந்து கழிவு முகாமை நிலையத்தின் பூமியிற்கருகில் இருக்கும் மாவாற்றுக்கு அடித்துச் செல்லும் அவதானம் காணப்படுகின்றது. கழிவு முகாமை மத்திய நிலைய பூமியில் மலக் கழிவு அடித்துக் செல்லப்படுமாயின் அங்கு நடவடிக்கை

பாதிப்படைவதுடன் சூழலில் கலப்பதன் காரணமாக ஊழியர்களது சுகாதாரத்திற்கு அபாயம் ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கும். சபைக் குரிய 02 கலி பவுசர் காணப்படுவதுடன் 2015 வருடம் முதல் கலி சேவை பொது இடங்களுக்கு மாத்திரம் வரையருக்கப்பட்டிருந்தது. இதன் படி கலி பவுகர் இரண்டும் பயன்படுத்தப்படாத சொத்தாக மாறியிருந்ததுடன் மக்கள் தேவை சரியான முறையில் ஆற்றப்படவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்காக சமாப்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 45 தொடர்பாக மொத்தம் ரூபா. 48,026,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 10 தொடர்பாக ஒதிக்கீடு நூற்றுக்கு 80 இருந்து 99 வரை நூற்று வீதத்திற்கு சமமாக ரூபா. 19,951,218 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 வருமான விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா. 6,500,000 வாக இருந்ததுடன் உண்மையான வருமானம் ரூபா.2,490,440 ஆகக் காணப்படுவதால் பாதீட்டு வருமானத்துடன் அதனை ஒப்பீடு செய்யும் போது வருமான விடயங்களில் வருமானம் அறவிடும் வேறுபாடு நூற்றுக்கு 33 வீதம் முதல் நூற்றுக்கு 69 வரையிலான எல்லையில் குறைந்திருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|---|
| (அ) வருமானக் கட்டுப்பாடு | (i) | வரிப்பணம் தொடர்பாக சொத்து மதிப்பீடு பரிந்துரைத்த படி செய்யாதது. |
| | (ii) | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதது. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டுச் செலவு ஒதுக்கீடுகளில் கவனத்திற் கொள்ளக் கூடிய அளவில் மிகுதி காணப்பட்டது. |
| | (ii) | பாதீட்டு வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |